S.C.No.41/2019
Date : 03.03.2026.
(1, 2 எதிரிகள் ஆஜர்.)

அ.சா.8. ரவிகுமார், த/பெ.செந்தூர்பாண்டியன்

**<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:–</u>**

நான் எனது கையெழுத்தை தட்டப்பாறையில் வைத்து போட்டுக் கொடுத்தேன். 2 ஆய்வாளரும் ஒரு போலிசாரும் இருந்ததாக போலிஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை. அவர்களின் பெயர், காவல்நிலையம் பற்றி எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் நான் புதியம்புத்தூர் அருகில்வரும்போது எங்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த ஒரு நபர் போன் பண்ணினார் யார் என்று ஞாபகம் இல்லை என்று சொன்னதை போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. இந்த சம்பவத்தை யார் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் அன்றையதினம் 2 கையெழுத்துக்கள் போட்டுக் கொடுத்தேன். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியும். அதில் வரைபடம் வரைந்ததற்கும் இரண்டு கவரில் மண் எடுத்ததற்கும் கையெழுத்து செய்தேன். நான் முதல் விசாரணையில் சொன்ன நாளில் சொன்னதுபோல் தட்டப்பாறையில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் புகார்தாரர் கேட்டுக்கொண்டதன்பேரிலும் போலிசார்

கேட்டுக்கொண்டதன்பேரிலும் போட்டுக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**